வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 06.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை முழுமையாக எட்ட, ரயில்வே துறையின் மேம்பாடு மிக முக்கியம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டின் HMPV வைரஸ் தாக்குதல் நிலவரங்களை, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், தன்னிடம் உள்ள எல்லா கண்காணிப்பு வசதிகளையும் பயன்படுத்தி, தீவிரமாக கண்காணித்து வருகிறது.

தமிழக சட்டப் பேரவையின் மரபுகள், முந்தைய அமர்வுகளை போலவே தொடரும் என்றும், இதில் எந்த மாற்றமும் இராது என்றும் பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கான திருத்தப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில், மொத்தம் 10 லட்சத்து 14 ஆயிரத்து 70 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

---

*மோடி-ரயில்வே 1 (18)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலிக் காட்சி மூலம், பல்வேறு ரயில்வே திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். ஜம்மு-காஷ்மீரில், ரயில்

தொடர்புகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் மற்றொரு பகுதியாக, புதிய ஜம்மு ரயில்வே கோட்டத்தையும் பிரதமர் தொடக்கி வைத்தார். இதனால் ஜம்மு-காஷ்மீர் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகள் பெரிதும் பயன்பெறும் என்றும், ரயில் இணைப்பு தொடர்பான மக்களின் நீண்டகால கோரிக்கைகள் நிறைவேற ஏதுவாகும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ரயில் இணைப்புகள் அதிகரிப்பதால், சுற்றுலாத் துறை மேம்பட்டு, வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும், பிராந்தியத்தின் ஒட்டுமொத்த சமூக பொருளாதார மேம்பாடு உறுதியாகும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, தெலங்கானா மாநிலம் சர்லபள்ளியில், புதிதாக அமைக்கப் பட்டுள்ள ரயில் முனையத்தையும் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். கிழக்கு கடற்கரை ரயில்வே மண்டலத்தில், ராயகடா ரயில்வே கோட்டத்திற்கு, புதிய கட்டிடம் கட்டும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். இதனால், ஆந்திர பிரதேசத்தில் மட்டுமின்றி, ஒடிசா உள்ளிட்ட பகுதிகளிலும், ரயில் இணைப்பு மேம்படும் என்று அரசு வட்டாரங்கள்

*மோடி-ரயில்வே 2 (16)*

தெரிவித்துள்ளன. முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்குடன் தற்போது நாடு செயல்பட்டு வருவதாகவும், இந்த இலக்கை முழுமையாக எட்ட, ரயில்வே துறையின் மேம்பாடு மிக முக்கியம் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது உரையில் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில், நாட்டின் ரயில்வே துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை, கண்கூடாகவே

காண முடிவதாகவும், இந்த வளர்ச்சியால், நாட்டின் ஒட்டுமொத்த தோற்றமே மாறி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் ரயில் இணைப்பு, ரயில்வே கட்டமைப்பின் நவீனமயம், ரயில் பயணிகளுக்கு நவீன வசதிகள், உப தொழில்களின் மேம்பாடு மூலம் அதிக வேலை வாய்ப்புகள் ஆகிய 4 தூண்களின் அடிப்படையில், ரயில்வே துறையில் மேம்பாட்டுப் பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாக பிரதமர் கூறினார். ரயில் பாதைகளை 100 சதவிகிதம் மின்மயமாக்கும் இலக்கை நாடு எட்டி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி, ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி உள்ளிட்டவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---------------------------------------

வைரஸ் 1 (12)

சீனாவில், HMPV வைரஸ் தாக்குதல் குறித்து கவலை அதிகரித்து வரும் நிலையில், இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில், 2 பச்சிளம் குழந்தைகளுக்கு, HMPV வைரஸ் தாக்குதல் இருப்பதாக கண்டறியப் பட்டுள்ளது. சுவாச மண்டலத்தை பாதிக்கக் கூடிய பல்வேறு வைரஸ் தாக்குதல்களை கண்டறிவதற்கான, வழக்கமான கண்காணிப்பு முயற்சிகளின் ஒருபகுதியாக, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், 2 பச்சிளம் குழந்தைகளின் HMPV வைரஸ் தாக்குதலை கண்டறிந்து

இருப்பதாகவும், பாதிக்கப்பட்ட 3 மாத பெண் குழந்தை மற்றும் 8 மாத ஆண் குழந்தையின் உடல்நிலை தற்போது தேறி வருவதாகவும், மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இவ்விரு குழந்தைகளுக்கும், வெளிநாட்டு பயணத் தொடர்பு இல்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அமைச்சகத்தின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள மேலும் சில விவரங்கள்....

(வாய்ஸ்)

வைரஸ் 2 (10)

(வாய்ஸ்)

நாட்டின் HMPV வைரஸ் தாக்குதல் நிலவரங்களை, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், தன்னிடம் உள்ள எல்லா கண்காணிப்பு வசதிகளையும் பயன்படுத்தி, தீவிரமாக கண்காணித்து வருகிறது. நாட்டில், ஃப்ளூ காய்ச்சல் அல்லது சுவாச நோய்களால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையில், இயல்புக்கு மீறிய அதிகரிப்பு எதுவும் காணப்படவில்லை என்றும், மத்தி சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் நிலவரங்களை சமாளிக்க, நாடு முற்றிலும் தயார் நிலையில் இருப்பதாகவும், தயார் நிலை குறித்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இவ்வாறு தெரிய வந்திருப்பதாகவும், அமைச்சகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------------------

தமிழ்நாடு ே□ரவை (16)

தமிழக சட்டமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் இன்று தொடங்கி உள்ளது. இக்கூட்டத் தொடரின் அமர்வுகள், வரும் 11ஆம் தேதி வரை நடைபெறும். முதல் நாளான இன்று அவையில், சபாநாயகர் திரு. அப்பாவு, ஆளுநர் உரையை தமிழில் வாசித்தார். தொடர்ந்து ஆளுநர் உரையின் ஆங்கிலம், மற்றும், தமிழ் வடிவங்களை, அவையின் அலுவல் பட்டியலில் சேர்ப்பதற்கான தீர்மானத்ததை, அவை முன்னவர் திரு. துரைமுருகன், அவையில் கொண்டு வந்தார். பின்னர் இத்தீர்மானம், குரல் ஒட்டு மூலம் நிறைவேற்றப்பட்டது. அவையின் இன்றைய அமர்வு முடிந்த பின்னர், பேரவைத் தலைவர் திரு. அப்பாவு செய்தியாளர்களிடம் பேசுகையில், அவை மரபுகள், முந்தைய அமர்வுகளை போலவே தொடரும் என்றும், இதில் எந்த மாற்றமும் இராது என்றும் கூறினார். சட்டப் பேரவையில் பின்பற்ற வேண்டிய, கௌரவம் மிகுந்த எல்லா மரபுகளும், தொடர்ந்து பின்பற்றப்படும் என்று அவர் தெரிவித்தார். இதற்கிடையே தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், தமிழக சட்டப் பேரவையில், பாரத அரசியல் சாசனமும், தேசிய கீதமும் அவமதிக்கப் பட்டதாக கூறியுள்ளார்.

---------------------------------------

*வாக்காளர் □ட்டியல் 1 (9)*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், இவ்வாண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, சுருக்க முறையில் திருத்தி அமைக்கப் பட்டுள்ள, இறுதி வாக்காளர் பட்டியலை, தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம், இன்று வெளியிட்டுள்ளது. இதன்படி, யூனியன் பிரதேசத்தின் அனைத்து 30 தொகுதிகளிலும் மொத்தம் 10 லட்சத்து 14 ஆயிரத்து 70 வாக்காளர்கள் உள்ளனர். இதில், ஆண் வாக்காளர் எண்ணிக்கை, 4 லட்சத்து 74 ஆயிரத்து 788. பெண் வாக்காளர் எண்ணிக்கை, 5 லட்சத்து 39 ஆயிரத்து 125. இது அல்லாது, 3ஆம் பாலின வாக்காளர்கள் 157 பேரும், பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இறுதி வாக்காளர் பட்டியல் குறித்து, கூடுதல் தகவல்கள்....

(வாய்ஸ்)

*வாக்காளர் □ட்டியல் 2 (17)*

(வாய்ஸ்)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், பிராந்திய வாரியான வாக்காளர் பட்டியலின்படி, புதுச்சேரி பிராந்தியத்தில், 7 லட்சத்து 76 ஆயிரத்து 815 வாக்காளர்களும், காரைக்கால் பிராந்தியத்தில், 1 லட்சத்து 68 ஆயிரத்து 185 வாக்காளர்களும் உள்ளனர். மாஹே பிராந்தியத்தில் வாக்காளர் எண்ணிக்கை, 29 ஆயிரத்து 448. ஏனாம் பிராந்தியத்தில் வாக்காளர் எண்ணிக்கை, 39 ஆயிரத்து 622.

இறுதி வாக்காளர் பட்டியல், இன்று முதல், பொது விடுமுறை அல்லாத 7 நாட்களுக்கு, அனைத்து வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில், பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என, தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார். 18-19 வயதிற்கு உட்பட்ட முதல் முறை வாக்காளர்களுக்கும், குடிபெயர்வு காரணமாக திருத்தம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கும், விரைவு அஞ்சல் மூலம், வாக்காளர் அட்டை அனுப்பி வைக்கப்படும் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 18 வயது பூர்த்தி அடைந்து, இதுவரை விண்ணப்பிக்காதவர்களும், வரும் ஏப்ரல் 1, ஜூலை 1, மற்றும், அக்டோபர் 1ஆம் தேதி 18 வயதை பூர்த்தி செய்பவர்களும், voter Helpline மொபைல்



செயலி, தேர்தல் ஆணையத்தின் இணைய தளம், அல்லது, வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மூலம், பெயர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும், பொது மக்கள், தேர்தல் தொடர்பான விவரங்களுக்கு, 1-9-5-0 என்னும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அணுகலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------------------

*□ட்டியல் காரைக்கால்- ஏனாம்* (7)

இதற்கிடையே, காரைக்கால் மாவட்டத்திற்கான இறுதி வாக்காளர் பட்டியல், மாவட்ட தேர்தல் அதிகாரியும், துணை ஆட்சியருமான திரு. அர்ஜூன் ராமகிருஷ்ணன் தலைமையில், இதர அதிகாரிகள், மற்றும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், காரைக்காலில் இன்று வெளியிடப்பட்டது. ஏனாம் பகுதிக்கான இறுதி வாக்காளர் பட்டியலை, மண்டல நிர்வாக அதிகாரியும், வாக்காளர் பதிவு அதிகாரியுமான திரு. ஆர். முனுசாமி, ஏனாமில் இன்று வெளியிட்டார்.

---------------------------------------

*பெ□ாங்கல் சந்தை* (8)

அரியாங்குப்பம் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலம், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்கள் அடங்கிய, பொங்கல் அங்காடி, மற்றும், கிராமச் சந்தையை, புதுச்சேரி சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் இன்று திறந்து வைத்தார். அரியாங்குப்பத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. கார்த்திகேசன், மற்றும், அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர். திறப்பு விழாவில், சபாநாயகர் திரு. ஆர். செல்வம் பேசுகையில்……

(வாய்ஸ்)

---------------------------------------

பேருந்து கட்டணம் (9)

புதுச்சேரிக்கும், பெங்களுருக்கும் இடையிலான பிஆர்டிசி சொகுசுப் பேருந்துகளில், பகல் நேரப் பயணத்திற்கான கட்டணம், சாதாரண கட்டணமாக குறைக்கப் பட்டுள்ளது. இனி இரவு நேர பயணத்திற்கு மட்டுமே, சொகுசுப் பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்படும் என, பிஆர்டிசி அறிவித்துள்ளது. இதனால், புதுச்சேரிக்கும், பெங்களுருக்கும் இடையிலான பிஆர்டிசி சொகுசுப் பேருந்துகளில், பகல் நேரப் பயணத்திற்கான கட்டணம், 485 ரூபாயில் இருந்து, 390 ரூபாயாக குறைகிறது. பகல் நேரப் பேருந்தில், வழியில் ஏறி இறங்கும் பயணிகளுக்கான கட்டணமும், சாதாரண கட்டணமாக குறைக்கப் பட்டுள்ளது.

---------------------------------------

*ஏனாம் கண்காட்சி (8)*

ஏனாமில், 23ஆவது மலர் கண்காட்சியின் ஒருபகுதியாக, குறைந்த விலையில் தயாரிக்கப்பட்ட சத்துணவுப் பொருட்கள், மற்றும், வீட்டு தோட்டத்தில் பயிரிடப்பட்ட காய்கறிகள் போட்டி, ஜிஎம்சி பாலயோகி விளையாட்டு அரங்கில் இன்று நடைபெற்றது. புதுச்சேரி வேளாண் துறை இயக்குநர் டாக்டர் வசந்தகுமார், இப்போட்டிகளை தொடக்கி வைத்தார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, வரும் 8ஆம் தேதி, மலர் கண்காட்சியின் நிறைவு விழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் பரிசுகளை வழங்குவார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------------------

*நிர்மலா* (8)

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், இன்று புதுடெல்லியில், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மற்றும், சம்பந்தப்பட்ட இதர தரப்பினருடன், பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி மற்றும் நிதி உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான அரசுச் செயலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இது, வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் தாக்கலுக்கு முன்பாக, நிதியமைச்சர் நடத்தும் 8ஆவது ஆலோசனைக் கூட்டமாகும்.

---------------------------------------

*கர்நாடக அரசு* (12)

பெங்களூரில் 2 பச்சிளம் குழந்தைகளுக்கு HMPV வைரஸ் தாக்குதல் கண்டறியப் பட்டதை தொடர்ந்து, கர்நாடக சுகாதார அமைச்சர் திரு. தினேஷ் குண்டுராவ், இன்று, தமது துறையைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். வைரஸ் பரவாமல் தடுக்க, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளதாகவும், நிலவரங்களை கட்டுப்படுத்துவது குறித்து, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்துடன் தாங்கள் தொடர்பு கொண்டுள்ளதாகவும், அவர் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பெங்களூருவில் 2 பச்சிளம் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள HMPV வைரஸ் தாக்குதல், சீனாவில் பரவிவரும் அதே வகை வைரஸ் தாக்குதலா என,

செய்தியாளர்கள் கேட்டதற்கு, அவ்வாறு கருத எந்த காரணங்களும் இல்லை என்று, அமைச்சர் பதில் அளித்தார்.

-------------------------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை முழுமையாக எட்ட, ரயில்வே துறையின் மேம்பாடு மிக முக்கியம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டின் HMPV வைரஸ் தாக்குதல் நிலவரங்களை, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், தன்னிடம் உள்ள எல்லா கண்காணிப்பு வசதிகளையும் பயன்படுத்தி, தீவிரமாக கண்காணித்து வருகிறது.

தமிழக சட்டப் பேரவையின் மரபுகள், முந்தைய அமர்வுகளை போலவே தொடரும் என்றும், இதில் எந்த மாற்றமும் இராது என்றும் பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கான திருத்தப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில், மொத்தம் 10 லட்சத்து 14 ஆயிரத்து 70 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.